வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 820/ ஆ1/2022 நாள் 27.03.2022

| | |
|---|---|
| பொருள் | தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி – பள்ளிக் கல்வித் துறையின் கீழுள்ள அரசு பள்ளி /அலுவலகங்களில் பணியுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் Central Trade Unions and Employees association 28.03.2022 மற்றும் 29.03.2022 நடத்தும் அகில இந்திய வேலை நிறுத்தப் போராட்டத்தில் தமிழக அரசு ஊழியர்கள் கலந்து கொள்ளாமல் இருக்க அறிவித்தல் மற்றும் கலந்து கொள்பவர்களின் விவரம் கோருதல் – சார்பாக |
| பார்வை | சென்னை -6, தலைமை செயலரின் கடிதம் எண் 9742/கே1/2022-1 நாள் 24.03.2022 |

வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை அரசு உயர்நிலை / மேல்நிலை / தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / அலுவலகப்பணியாளர்கள் / மாவட்டக் கல்வி அலுவலகம் / வட்டாரக் கல்வி அலுவலகங்களில் பணிபுரியும் ஆசிரியரல்லா பணியாளர்கள் Central Trade Unions and Employee Association ஆல் 28.03.2022 மற்றும் 29.03.2022 ஆகிய தினங்களில் நடத்தப்படும் அகில இந்திய வேலை நிறுத்தப் போராட்டத்தில் தமிழக அரசு ஊழியர்கள் கலந்து கொண்டால் தமிழ்நாடு அரசு பணியாளர் நடத்தை விதிகளை மீறியதாக கருதப்படும் என்றும் வேலை நிறுத்தப் போராட்ட காலத்தில் மருத்துவ விடுப்பு தவிர வேறு எவ்வித விடுப்பும் அனுமதிக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறும் 28.03.2022 மற்றும் 29.03.2022 ஆகிய இருதினங்களில் பள்ளி / அலுவலகத்திற்கு வருகை புரிபவர்களின் விவரங்களை அரசு நகராட்சி தொடக்க / நடுநிலைப் பள்ளி

தலைமைஆசிரியர்கள் / ஒன்றியத்திற்குட்பட்ட வட்டாரக் கல்வி அலுவலரிடமும் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி / தலைமைஆசிரியர்கள் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரிடம் காலை 9.30 மணிக்குள் ஒப்படைக்குமாறு அனைத்து வகை தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் வேலூர் , மாவட்டக் கல்வி அலுவலர் மேற்காண் பள்ளிகளிடமிருந்து பெறும் விவரங்கள் அனைத்தும் (அரசு நகராட்சி தொடக்க / நடுநிலை அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிரிளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் விவரங்களை பெற்று தொகுத்து காலை 10.00 மணிக்குள் இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**இணைப்பு**

பார்வையில் காணும் அரசுக் கடிதம்

. .// ஒப்பம்//

// க. முனுசாமி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்.

**பெறுநர்**

1. அனைத்து வகை அரசு பள்ளி தலைமைஆசிரியர்கள்
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் வேலூர் மாவட்டம்.

**நகல்**

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கையின் பொருட்டும் அனுப்பலாகிறது

**குறிப்பு – ( தொடக்கப் பள்ளிகள் சார்பாக தனியாகவும் மற்றும் பள்ளிக் கல்வித்துறை சார்பான விவரங்கள் தனியாகவும் இணைப்பில் கண்ட கடிதத்தில் உள்ள படிவத்தில் உள்ளவாறு தொகுத்து ஒப்படைக்கப்பட வேண்டும் )**